மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.52/2022</u>

2026ம் ஆண்டு ஜூலை 06ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயபாரதி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>06.07.2026 வா.சா.2 சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். இந்த வழக்கிற்காக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு இந்த வழக்கில் சாட்சியமளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை என்று சொன்னால் சரிதான். இறந்து போன சுந்தர மனோகரன் என்பவரை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர் எனது பக்கத்து வீட்டில் குடியிருந்தார். அவரின் முதல் மனைவி பெயர் கண்ணம்மாள் என்றால் சரிதான். அவர் 27.02.2012ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். கீதா மற்றும் சதீஷ்குமார் ஆகியோர்கள் தான் அவருக்கு வாரிசுகள் என்றால் சரிதான். பின்னிட்டு 2013 ஆம் ஆண்டு

சுந்தர மனோகரன் அன்னபூரணி என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்றால் ஆமாம். அவர்களுக்கு கோகுல் மட்டும் ஒரே வாரிசு என்றால் ஆமாம்.

<u>**4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. இந்த வழக்கில் சாட்சியமளிக்க எனக்கு அழைப்பாணை ஏதேனும் வந்ததா என்றால் இல்லை. வாதிகள் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். சுந்தர மனோகரன் 1ம் பிரதிவாதியை எப்போது திருமணம் செய்து கொண்டார் என்றால் முதல் மனைவி இறந்ததற்கு பின்பு 2013 திருமணம் செய்து கொண்டார் தேதி, மாதம் தெரியாது. சுந்தர மனோகரன் மற்றும் 1ம் பிரதிவாதிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரே மகன்தான். அவர் பெயர் கோகுல். 4ம் பிரதிவாதி இறந்து போன சுந்தர மனோகரன் என்பவரின் முதல் நிலை வாரிசு என்றால் ஆமாம்.

(2, 3 பிரதிவாதிகள் ஆஜர் இல்லாததாலும், பிரதிநிதித்துவம் இல்லாததாலும் அவர்கள் தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.07.06 19:09:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்.